# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1802/16 - 2013 මාර්තු මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.03.21

*1802/16 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

*கம்பஹா பிரதேச சபை*

*கம்பஹா பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. குமாரபேலி ஆரச்சிகே இந்திக சமன் குமாரபேலி அவர்கள், மக்கள் விடுதலை முன்னணி கட்சியின் உறுப்பினராக இருந்தமை இல்லாதொழிந்துள்ளதால், மேற்படி பிரதேச சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென கம்பஹா பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பதிராஜ ஆரச்சில்லாகே சுனில் சேனாரத்ன ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*பீ. ஏ. எஸ். சேனாரத்ன,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*கம்பஹா பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*கம்பஹா,*
*2013, மாச்சு 12.*

*4 - 181*

---

### இபலோகம பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

*இறப்பெய்தியமை காரணமாக இபலோகம பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும்;*

*முஹம்மது யூனுஸு அப்துல் லதீபு எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், இபலோகம பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியுள்ள ஆளொருவராக திரு. ஹீன்பண்டா சந்தர ரத்ன பண்டார ராஜகருணா என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது இபலோகம பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் கருணாசிங்ஹ ஜயரத்னகே சம்பத் மாதவ ஆகிய நான், திரு. ஹீன்பண்டா சந்தர ரத்ன பண்டார ராஜகருணா என்பவர் இபலோகம பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

கே. ஜே. எஸ். மாதவ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
இபலோகம பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அநுராதபுரம்,
2013, மாச்சு 13.

4 - 182

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.